தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# அலையாத்தி காடுகள் குறித்த சர்வதேச தின கொண்டாட்டம்

**கோவை, ஜூலை 27–**

அலையாத்தி காடுகளின் சூழல் மண்டலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம், கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், டிஜிட்டல் முறையில் கொண்டாடப்பட்டது.

இங்குள்ள் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் பேஸ்புக் லைவ் மூலம் நடந்த விழாவில், முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், அறிமுக உரையாற்றினார்.

அவர் பேசுகையில், ''அலையாத்தி காடுகள் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இன்னும் 100 ஆண்டுகளில் மீதமுள்ள அலையாத்தி காடுகளும் அழிந்து விடும்,'' என்றார்.

வன மரபியல் நிறுவன இயக்குனர் குன்னி கண்ணன் பேசுகையில், ''மக்கள் தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் பெரும்பாலான மீன் இனங்கள், உணவுக்கும், இனப்பெருக்கத்துக்கும் அலையாத்தி காடுகளை பயன்படுத்துகின்றன. கடற்கரைக்கு பாதுகாப்பு அளிக்கும் இந்த காடுகள், இயற்கை பேரழிவுகளை குறைக்கின்றன. அவை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்,'' என்றார்.

மாணவர்கள், பொதுமக்களுக்கான ஆன்லைன் விழிப்புணர்வு வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. என்விஸ் திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

289. News in Dinamalar, 27.07.2021, Coimbatore, Digital Observance of International Day for the Conservation of the Mangrove Ecosystem by IFGTB ENVIS.